"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.761,06,88,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5–6–2018) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

118. மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

119. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

120. மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

121. "மீன் வளத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

122. "கால்நடை பராமரிப்புத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

123. "பால் வளத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

124. மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2018–2019. (தமிழ்)

125. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2018–2019. (தமிழ்)

126. பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2018–2019. (தமிழ்)